உ

ஸ்ரீ நித்யகல்யாணி அம்மன் துணை

# சுமங்கலிப் பிரார்த்தனை



தப்பளாம்புலியூர் கிராமத்தின் பாரம்பரிய
விசேஷ அனுஷ்டான முறைகளை
தற்போதிருக்கும் சந்ததி மட்டுமல்லாமல்
வருங்கால சந்ததிகளுக்கும் எடுத்து
செல்லும் ஒரு முயற்சி...


**SNASS RELIGIOUS TRUST**
Thappalampuliyur,
Ph: 044-24311096 / 98400 36514 / 95510 66125
E-mail : snasstpuliyur@gmail.com


மே 2020

# சுமங்கலிப் பிரார்த்தனை

## 1) சுமங்கலிப் பிரார்த்தனை :



ஸ்வாமி அலங்காரம்

சுமங்கலிப் பிரார்த்தனை என்னும் விசேஷம் எல்லாக் குடும்பங்களிலும் செய்யும் ஒரு முக்கிய பிரார்த்தனை ஆகும். இந்த பிரார்த்தனையில் ஒவ்வொரு குடும்பத்திலும் வழி வழியாய் வந்து முக்தி அடைந்த எல்லா சுமங்கலிப் பெண்களையும் வழிபடும் ஒரு விசேஷம் ஆகும். இந்த பிரார்த்தனை ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு அல்லது மூன்று வருடத்திற்கு ஒரு முறை செய்வது அவசியம். மேலும் தங்கள் குடும்பத்தில் நடக்கும் திருமணங்கள் (பிள்ளை / பெண் கல்யாணம்) உபநயனம், சஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம் போன்ற பெரிய விசேஷங்களுக்கு முன்பாக மேற்கூறிய சுமங்கலி பெண்களுக்கு பிரார்த்தனை செய்வதினால் குடும்பம் க்ஷேமமாக இருக்கும் என்பது ஐதீகம்.

சுமங்கலி பிரார்த்தனையை பெண் வீட்டு திருமணம் என்றால் திருமணத்திற்கு முன்பாகவும், பிள்ளை திருமணம் என்றால் அதற்கு பின்பாகவும் செய்வது வழக்கமாகும். ஏனென்றால் பிள்ளை திருமணத்தில் வீட்டிற்கு வரும் புதிய பெண்ணையும் இந்த விசேஷத்தில் கலந்து கொள்ளச் செய்வதே இதற்கு காரணமாகும். அதேபோல புது வீடு கிருஹப்பிரவேசம் செய்த பிறகு புதிய வீட்டில் முதல் நல்ல விசேஷமாக இந்த பிரார்த்தனையை செய்வார்கள்.

இந்த விசேஷத்தில் தனது குடும்பத்தில் முக்தி அடைந்த முன்னோர் பெண்களை முன் வைத்து பிரார்த்தனை செய்வதால் இதில் கட்டுப்பாடு, ஆசார அனுஷ்டானங்கள் பய பக்தி முதலியவைகள் சற்று அதிகமாக தேவைப்படுகிறது.

தங்கள் குடும்ப ஷேமம் மற்றும் வீட்டில் நடக்கும் பெரிய விசேஷ வைபவங்கள், நல்ல முறையில் நடக்க வேண்டும் என்பதே இந்த பிரார்த்தனையின் குறிக்கோளாகும். இது ஒவ்வொரு கிராமத்திலும் ஓவ்வொரு குடும்பத்திலும் வழிமுறைகளில் ஓரளவு மாறுபடும்.

## 2) செய்ய வேண்டிய நாட்கள் பற்றிய விவரம் :

- நல்ல நாட்கள் - திங்கள், புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகள்.
- விலக்க வேண்டிய மாதங்கள் - தமிழ் மாதம் - ஆடி, புரட்டாசி, ஐப்பசி, மார்கழி.
- விலக்க வேண்டிய நாட்கள் - சனி, ஞாயிறு, செவ்வாய் மற்றும் வியாழன். ஆனால் சில சமயங்களில் கல்யாணம், உபநயனம், சஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம் முதலிய விசேஷங்களை முன்னிட்டு ஞாயிறு மற்றும் வியாழக்கிழமைகளில் இந்த பிரார்த்தனை செய்வதும் வழக்கத்தில் உள்ளது.
- விலக்க வேண்டிய நட்சத்திரங்கள் - பரணி, கிருத்திகை, ஆயில்யம் மற்றும் கேட்டை.
- விலக்க வேண்டிய திதிகள் - அமாவசை, பௌர்ணமி, பிரதமை அஷ்டமி, நவமி, ஏகாதசி, துவாதசி, சதுர்தசி.
- விலக்கப்பட வேண்டிய மேலும் சில நாட்கள் - மாதப்பிறப்பு, மஹாளய பட்சம், மரண யோகம் மற்றும் கரி நாட்கள்.
- சுமங்கலிகளை உட்கார வைக்கும் நேரம் இராகு காலம் மற்றும் எமகண்டம் இல்லாமல் இருக்க வேண்டும்.

## 3) தயார் செய்ய வேண்டிய சாமான்கள் :

- சுவாமி வஸ்திரம் - கருப்பு நிறம் கலக்காமல் ஒரு ஒன்பது கஜம் புடவை மற்றும் ரவிக்கை துணை.
- சுமங்கலிகளுக்குத் தயார் செய்ய வேண்டிய முக்கிய சாமான்கள் - வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம், சந்தனம், கண்ணாடி, சீப்பு, மருதாணி, பூ, வாழைப்பழம், தட்சிணை (சௌகரியப்படி) ரவிக்கைத் துணை (இது தவிர பரிசுப் பொருட்கள் அவரவர்கள் சௌகரியப்படி) ஆகியவைகளை ஒவ்வொரு சுமங்கலிகளுக்கும் கொடுப்பதற்கு வசதியாக தனித்தனியாக வைத்துக் கொள்ளலாம்.

- காளாஞ்சி (விளக்கத்திற்கு செய்முறை குறிப்பை பார்க்கவும்)
- பிரார்த்தனைக்கு முதல் நாள் சுமங்கலிகளை நேரில் போய் அழைக்கும் பொழுது அவர்களுக்கு நல்லெண்ணை, சீயக்காய் தூள், மஞ்சள் கிழங்கு ஆகியவைகளை கொடுக்க வேண்டும்.
- வழக்கமாக ஒன்று அல்லது இரண்டு கன்னியா பெண்களையும் (மாதவிடாய் ஆரம்பிக்காத பெண் குழந்தைகள்) இந்த பிரார்த்தனைக்கு அழைத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு புதிய ஆடைகள் வாங்கி கொடுக்கும் பழக்கம் உண்டு. பிரார்த்தனைக்கு உட்காரும் பெண்களின் இவர்களும் எண்ணிக்கையில் அடங்குவார்கள்.
- சுவாமி புடவைக்கு போட சரமல்லிகை, முல்லை மற்றும் ஜாதிப்பூ போன்ற வாசனைப் பூக்கள் மேலும். மேலும் முக்கியமாக சிவப்பு விருட்சிபூ, மரிக் கொழுந்து, தவனம் முதலியவைகள் மிகவும் விசேஷமானவை.
- சுமங்கலிகளுக்கு சாப்பிட நுனி வாழை இலை போட வேண்டும்.

## 4) பிரார்த்தனைக்கு உட்கார வைக்கும் பெண்களைப் பற்றிய விவரம் :

❁ உட்கார வைக்கும் பெண்களின் எண்ணிக்கை ஒற்றைப்படையில் இருக்க வேண்டும் (அதாவது 5,7,9,11 என்ற எண்ணிக்கையில் இருக்க வேண்டும்.) இந்த எண்ணிக்கையில் சுவாமி புடவை மற்றும் கன்னியாப் பெண்களும் அடங்கியது.

❁ சுமங்கலிப் பெண்கள் (வீட்டுப் பெண்கள் மற்றும் மாற்றுப் பெண்கள் (மருமகள்) உட்பட) தலைப் பிரசவமாக இருந்தால் 4 மாதத்திற்கு மேல், அடுத்த பிரசவமாக இருந்தால் 5 மாதத்திற்கு மேல் இருந்தால் அவர்களை உட்கார வைக்கக் கூடாது.

❁ உட்கார வைக்கும் சுமங்கலியின் வீட்டில் ஒரு வருடத்திற்கு ஏதாவது அசம்பாவிதமாகி இருந்தால் அவர்களை உட்கார வைப்பது உசிதமில்லை.

## 5) செய்ய வேண்டிய சமையல் வகைகள் (தப்பளாம்புலியூரில் ஒரு சில குடும்பங்களின் வழக்கம்)

1) வெல்லப் பருப்பு பாயாசம்

2) தயிர் பச்சடி

3) மாங்காய் பச்சடி

4) தனிக் கூட்டு (மிகவும் முக்கியமானது – விளக்கத்திற்கு செய்முறைக் குறிப்பைப் பார்க்கவும்)

5) பரங்கிக்காய், புடலங்காய், பூசனிக்காய் மற்றும் வாழைக்காய் போன்ற விருப்பமான காய்கறிகளின் நான்கு வகை தித்திப்பு கூட்டுகள் (மேற்கூறிய காய்கறிகளை தனித்தனியாக வேகவைத்து கொஞ்சம் மஞ்சள் பொடி மற்றும் உப்பு போட்டு நன்றாக பிழிந்து எடுத்துவிட்டு அதில் வேண்டிய அளவு தனிக் கூட்டை சேர்த்து இந்த கூட்டுக்கள் செய்ய வேண்டும். தனிக்கூட்டு செய்து விட்டு, பிறகு அதை மொத்தம் 5 பாகங்களாக பிரித்துக் கொள்ளவும். அதை மேற்சொன்ன நான்கு கறிகாய் கூட்டுக்களுக்கும் தனியாகவும், பிறகு ஒரு பகுதியை தனிக்கூட்டாகவும் உபயோக படுத்திக் கொள்ளலாம்).

6) மாங்காய் ஊறுகாய்

7) தோசை மிளகாய்ப் பொடி

8) மெது வடை

9) அதிரசம்

10) கலத்துக்கு பருப்பு, நெய்

11) அன்னம்

12) கத்திரிக்காய் சாம்பார்

13) வெண்டைக்காய் (அ) பூசணிக்காய் மோர் குழம்பு

14) சீரக ரசம்

15) தயிர்

16) பாயாசம் போட்ட பிறகு பால், பானகம், (வெல்லத்தை தண்ணீரில் கரைத்து அதில் எலுமிச்சை சார், சுக்கு மற்றும் ஏலக்காய் போட்டு தயாரிக்கலாம்). மற்றும் நீர் மோர் கொடுக்க வேண்டும்.

## 6) பிரார்த்தனைக்குச் செய்ய வேண்டிய வழி முறைகள்:

முக்தி அடைந்த சுமங்கலிகளை பிரார்த்தனை செய்யும் பாவனையாக, பிரார்த்தனை நாளன்று கீழ்கண்ட வழி முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**a)** விடியற் காலையில் சுவாமி வைத்திருக்கும் இடத்தில் இழைக் கோலம் போட்டு அதன் மேல் ஒரு உட்காரும் பலகைப் போட்டு அதன் மேலும் இழைக் கோலம் போட வேண்டும். விளக்கு ஏற்றி வைக்க வேண்டும். பிறகு சுவாமிக்கு வாங்கி இருக்கும் ஒன்பது கஜம் புடவை மற்றும் ரவிக்கைத் துணியை பிரித்து விட்டு கொசுவி கோலம் போட்ட பலகையில் வைக்கவும். சுவாமியிடம் பூ மற்றும் நல்லெண்ணை வைக்க வேண்டும். யார் சுமங்கலிப் பிரார்த்தனை செய்கிறார்களோ அவர்கள் கொசுவிய புடவையில் எண்ணை தெளித்து பூ போட வேண்டும். பிறகு குளித்து விட்டு, கொசுவிய புடவை மற்றும் ரவிக்கைத் துணியை எடுத்து தண்ணீரில் நனைத்து பிழிந்து மடியாக உலர்த்தவும்.

**b)** பிறகு பிரார்த்தனைப் புடவை வைக்கும் இடத்தில் (சுமங்கலிகள் சாப்பிடப் போகும் வரிசையில்) இழைக் கோலம் போட்டு அதன் மேல் ஒரு இழைக் கோலம் போட்ட பலகையை வைக்கவும். அதில் மடியாக இருக்கும் காய்ந்த சுவாமிப் புடவை மற்றும் ரவிக்கைகளை அழகாக வைக்கவும். அதில் சர மல்லிகை, முல்லை மற்றும் ஜாதிப் பூக்கள் போன்ற வாசனைப் பூக்களால் அலங்காரம் செய்ய வேண்டும். முகம் பார்க்கும் கண்ணாடி சுவாமி புடவைக்குப் பின்னால் வைக்க வேண்டும்.

**c)** பிறகு கீழ்கண்ட சாமான்களை அந்த சுவாமி புடவைக்கு அருகில் வைக்கவும்:

1) ஏற்றிய குத்து விளக்கு, 2) கரைத்த சந்தனம், 3) தண்ணீர் நிரப்பிய சொம்பு, 4) பானகம் மற்றும் நீர் மோர், 5) சுமங்கலிகளுக்குக் கொடுக்க வேண்டிய வெற்றிலைப் பாக்கு ஒரு செட்டு, 6) தட்சிணை (சில்லரை நாணயம் சிறந்தது), 7) சுக்கு, வெல்லம் மற்றும் அரைத்த மருதாணி, 8) உடைத்த தேங்காய், அரைத்த நலுங்கு மஞ்சள் மற்றும் வடை, அதிரசம் மற்றும் பழ வகைகள்.

## 7) சுமங்கலிகளை கூப்பிடும் மற்றும் பிரார்த்தனைக்கு வரவேற்கும் முறைகள்:

✦ சுமங்கலிப் பிரார்த்தனைக்கு முதல் நாள் அவர்களை நேரில் அழைக்கும் பொழுது குங்குமம், மஞ்சள், நல்லெண்ணை, சீயக்காய் பவுடர் எடுத்துச் செல்ல வேண்டும். குங்குமம் மற்றும் மஞ்சளைக் கையில் கொடுத்து விட்டு எண்ணை மற்றும் சீயக்காய்த் தூளை கீழே வைத்து விட்டு, அழைக்க வேண்டும். நேரில் அழைக்க முடியாத பொழுது தொலைபேசியில் அழைத்து விட்டு மேற் சொன்ன பொருட்களுக்கு பணமாக தட்சிணையுடன் சேர்த்துக் கொடுத்து விட வேண்டும். மேலும் அழைக்கும் பொழுது அவர்களை ஒன்பது கஜம் மற்றும் ரவிக்கையை மடியாக உடுத்தி வரும் படி சொல்ல வேண்டும்.

✦ சுமங்கலிப் பிரார்த்தனையன்று வரும் சுமங்கலிகளை தேவதைகளுக்கு சமமாக கருதுவதால் அவர்களை நன்று வரவேற்று மஞ்சள் பொடி கொடுத்து கை கால்களை அலம்பிக் கொள்ளச் சொல்ல வேண்டும். பிறகு சந்தனம், குங்குமம் மற்றும் பூ கொடுத்து உபசரிக்க வேண்டும்.

✦ பிறகு சுவாமி இலையில் இருந்து ஆரம்பித்து எத்தனை சுமங்கலிகள் உட்காரப் போகிறார்களோ அத்தனை இலைக்கும் அடியில் இழைக் கோலம் போட்டு அதற்கு மேல் இலை போட வேண்டும். (இலையை இழை கோலத்தின் மேல் போடும்போது, இலையின் நுனி இடதுபுறம் இருக்குமாறு போடுதல் மிக அவசியம்.)



இழைக்கோலம் நுனி இலை போடும் விதம்



ஸ்வாமிக்கு பரிமாறுதல்



சுமங்கலிகளுடன் கன்னியாபெண் உட்கார வைத்தல்



ஸ்வாமிக்கு தீபாராதனை


சுமங்கலிக்கு தீபாராதனை


சுமங்கலிக்கு ஆபோஜனம் போடுதல்


சுமங்கலிகள் சாப்பிடுதல்

✦ முதலில் சுவாமி இலைக்குப் பரிமார ஆரம்பித்து வரிசையாக மற்ற இலைகளுக்கும் பரிமார வேண்டும்.

✦ பிறகு இலைகளை நெய்யினால் "அபிகாரம்" (ஒரு சொட்டு நெய்யை இலையில் விடுதல்) செய்து எல்லா இலைகளுக்கும் அன்னம் பரிமாற வேண்டும். பிறகு சுமங்கலிகள் அனைவரையும் வீட்டு நுழை வாசலுக்கு வரச் சொல்லி அங்கிருந்து சுமங்கலிப் பிரார்த்தனை செய்யும் நபர் அவர்களுக்கு ஆரத்தி எடுத்து வீட்டில் முக்தி அடைந்த சுமங்கலிகளின் பெயர்களைச் சொல்லி இவர்களை கூப்பிட வேண்டும். பிறகு எல்லோரையும் பரிமாரப்பட்ட இலையில் உட்காரச் சொல்ல வேண்டும். அப்படி உட்காரும் பொழுது சுமங்கலிப் பிரார்த்தனை செய்யும் நபரின் பெண் / பெண்கள் இருந்தால் அவர்களை வயது வாரியாக சுவாமி இலையின் பக்கம் உட்கார வைக்க வேண்டும்.

✦ பிறகு ஸ்வாமி மற்றும் சுமங்கலிகளுக்கு சாம்பிராணி மற்றும் கற்பூரம் காண்பிக்க வேண்டும்.

✦ இந்த சமயம் வீட்டில் இருக்கும் ஆண்கள் சுவாமி இலைக்கு வந்து நமஸ்காரம் செய்வார்கள்.

✦ பிறகு அவர்களுக்கு ஆபோஜனம்போட்டு (உத்திரணியால் கையில் தண்ணீர் கொடுத்தல்) நீர் சுற்றச் சொல்ல வேண்டும். (தண்ணீரை வலமாக இலையை சுற்றுதல்)


கன்னியாப்பெண்ணுக்கு மருதாணி இட்டு தாம்பூலம் கொடுத்தல்

✦ இனி சுமங்கலிகளைச் சாப்பிடுமாறு சொல்ல வேண்டும்.

## 8) சுமங்கலிகள் சாப்பிட்டு எழுந்தவுடன் செய்ய வேண்டியவை:

**I)** சுமங்கலிகளை உட்கார வைத்து அவர்களுக்கு சுக்கு, வெல்லம் முதலியவைகளை சாப்பிடக் கொடுக்க வேண்டும்.

**II)** கையில் இட்டுக் கொள்ள மருதாணி மற்றும் காளாஞ்சி மற்றும் போட்டுக் கொள்ள தாம்பூலம் உபசரிக்க வேண்டும்.

**III)** பிறகு அவர்களுக்கு செட்டாக வைத்திருக்கும் சௌபாக்கிய திரவியங்களை (வெற்றிலை, பாக்கு, பழம், பூ, தேங்காய், சீப்பு) கொடுக்க வேண்டும்.

**IV)** சுவாமியிடம் இருக்கும் புடவையை வீட்டில் இருக்கும் பெண்ணிற்கு கொடுத்து நல்ல வேளையில் அதைக் கட்டிக் கொண்டு சுவாமிக்கும் பெரியவர்களுக்கும் நமஸ்காரம் செய்யச் சொல்ல வேண்டும். சிலபேர் வீட்டுப் பெண்கள் இல்லாமல் மற்ற பெரியவர்களுக்கும் கொடுப்பது வழக்கத்தில் இருக்கிறது.

**தொகுப்பு: ஜெயம் மாமி மற்றும்**
**மீனாக்ஷி மாமி உதவியுடன்.**




சுமங்கலிக்கு மருதாணி இட்டு, காளாஞ்சி மற்றும் செயபாக்கிய திரவியங்கள் கொடுத்தல்



வீட்டு பெண்களுக்கு ஸ்வாமி புடவையை கொடுத்தல்

# செய்முறைக் குறிப்பு

## தனிக்கூட்டு (25-30) நபர்கள்



**தேவையான பொருட்கள் :**

1) துவரம் பருப்பு - 200gm
2) கடலைப் பருப்பு - 200gm,
3) பாகு வெல்லம் - 2 கிலோ (பொடி செய்தது),
4) முற்றிய தேங்காய்-2 (திருகி வைத்தது)
5) மிளகாய் வற்றல் - 4
6) மஞ்சள் பொடி - 2
7) அரிசி மாவு - 2 குழிக்கரண்டி
8) புளி - நெல்லிக்காய் அளவு,
9) உப்பு - ஒரு சிட்டிகை
10) தாளிக்க தேவையானவை: தேங்காய் எண்ணை - 200gm, நெய் - 200gm, கடுகு - 25gm, உடைத்த வெள்ளை பருப்பு - 200gm, கருவேப்பிலை,

துவரம் பருப்பு மற்றும் கடலைப் பருப்பை கொஞ்சம் எண்ணை விட்டு சிவப்பாக வறுத்து எடுத்துக் கொண்டு 4 மிளகாய் போட்டு தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். நன்கு ஊறிய பிறகு, மிருதுவாக அரைத்துக் கொள்ளவும். புளியை ஊறவைத்து, புளித்தண்ணீருடன் மஞ்சள் பொடி மற்றும் உப்பு போட்டு கடலைப் பருப்பு ஒரு ஸ்பூன் மற்றும் தேங்காய் எண்ணை நான்கு ஸ்பூன் விட்டு நன்கு கொதிக்க விட வேண்டும். கொதிக்கும் புளித்தண்ணீரில் அரைத்து வைத்த பருப்பு விழுதை போட்டுக் கொதிக்க விட வேண்டும். தேவையென்றால் சிறிதளவு தண்ணீர் கலந்து கொள்ளலாம். பிறகு பொடி செய்த வெல்லத்தை சிறிது தேங்காய் எண்ணை மற்றும் நெய் விட்டு கிளறவும். தோசை மாவு பதத்தில் வரும் பொழுது அரிசி மாவைத் தூவி நன்றாக சுருண்டு வருமாளவுக்கு கிளறி மேலும் தேங்காயெண்ணை மற்றும் நெய் விட்டு கீழே இறக்கி வைத்து விடவும்.

பிறகு திருகி வைத்த தேங்காய்ப் பூவை, தேங்காய் எண்ணை விட்டு சிவப்பாக வறுத்து எடுத்துக் கொள்ளவும். கடுகு, உளுத்தம் பருப்பு மற்றும் கருவேப்பிலை தாளித்து வைத்துக் கொண்டு இவை எல்லாவற்றையும் செய்து வைத்திருக்கும் தனிக்கூட்டில் போட்டு அடுப்பில் வைத்து, மீதி இருக்கும் நெய், தேங்காய்யெண்ணை விட்டு சுருண்டு வரும் அளவுக்கு கிளறி இறக்கி விடவும்.

# “காளாஞ்சி”

“காளாஞ்சி” என்பது 2 வெற்றிலை மற்றும் கொஞ்சம் வாசனைப் பாக்கு, கிராம்பு, ஏலக்காய் வைத்து தயார் செய்ய வேண்டும். இரண்டு வெற்றிலைகளின் காம்பை பிய்த்து விட்டு திருப்பி வைத்து அதில் வாசனைப்பாக்கு, கிராம்பு, ஏலக்காய்களை போட்டு, அதை ஒரு வெற்றிலையால் மடித்து மூடவும். பிறகு இரண்டு வெற்றிலைகளையும் இடப்பக்கம் மற்றும் வலப்பக்கமாக சமமாக மடித்து ஒரு நூல் அல்லது வாழை நாரால் கட்டி காளாஞ்சி தயாரிக்க வேண்டும்.

